சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 16/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | தமிழ்மாறன் |
| தந்தை பெயர் | : | பிச்சைமுத்து |
| கிராமம் | : | நன்னிலம் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | துணை காவல் கண்காணிப்பாளர் |
| வயது | : | 57 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 6 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள பாலு, அன்பு, முருகேசன், கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஆகிய நபர்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

அ.சா-1 கலியமூர்த்தியின் மற்றொரு பெயர் கோபி என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் எனது விசாரணையில் கோபி என்று கூறவில்லை. அ.சா-1ன் பெயர் கோபி என்று எனது விசாரணையில் அவர் குறிப்பிட்டதை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா-1 கலியமூர்த்தி எனது விசாரணையில் கல் இரு சக்கர வாகனத்தின் மீது பட்டு டூம் மற்றும் வாகனம் உடைந்து விட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. அ.சா-1 எனது விசாரணையில் காந்தி நகர் மெயின் ரோட்டில் சூரியா என்பவர் ஓரமா போ என்று அ.சா-1ன் மகனான அ.சா-4-யை திட்டியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. அதே சமயத்தில் அ.சா-1ன் பெரிய மகன் ஓரமா தான் போரேன் போடா என்று என் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. சூரியா 4.30 மணியளவில் பற புண்ட மவனே குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சரியல்ல. அ.சா -1-ற்கு உச்சந்தலையில் எந்தவிதமான காயமும் இல்லை என்று சொன்னால் சரிதான். அ.சா-1 என்னுடைய விசாரணையில் இனிமேல் இவனை விட கூடாது என்று சொல்லி எதிரிகள் அடித்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா-2 ராசு என்பவர் செல்வராஜ் வீட்டிலிருந்து கல்லால் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா-3 சுசிலா தனது மகன்கள் ஏதாவது தப்பு செய்திருந்தால் எங்களிடம் சொல்லியிருக்களாமே என்று எதிரிகளை பார்த்து திட்டிவிட்டு திரும்பினேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். செல்லதுரை வீட்டு வாசலில் இருந்து செல்லதுரை மகன்கள் இருவரும் அருவாளை எடுத்துக்கொண்டு எனது வீட்டுக்காரரை வெட்ட வந்தார்கள் என்றும், அவர் தனது வீட்டுக்காரரை வெட்டிவிடுவார்கள் என இழுத்தேன் என்றும், அவ்வாறு இழுத்தபோது அவரது நெற்றியில் அருவாளால் காயம் ஏற்பட்டது என்ற விபரத்தை அ.சா-3 எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா-3 சுசிலாவை எதிரிகள் பறச்சி பறச்சி என்று சொல்லி அவரது மயிற்றை பிடித்து இழுத்தாகவும், அவரது வயிற்றில் மிதித்ததாகவும், நெஞ்சி பகுதியில் அடித்து காயம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா-4 சுபிராஜ் 1ம் எதிரி

சூரியா பேசியதை அவரது அண்ணனிடம் சொன்னேன் என்றும், அதன் பின்னர் தனது அண்ணன் 1ம் எதிரி சூரியாவிடம் கேட்டதாக எனது விசாரணையில் அ.சா-4 சுபிராஜ் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா-4 தன்னை கல்லால் அடித்தார்கள் நான் விலகி கொண்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா-4 சுபிராஜ் 2ம் எதிரி கவியரசன் தன்னை பிடித்து கொண்டார் என்றும், அ.சா-4 கையால் தடுத்தபோது தனது இடது கையில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா-4 ஓய்ய ஒழுக்க, குச்சிகாரி மகனே என்று எதிரிகள் தன்னை திட்டியதாக எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வார்த்தைகள் இல்லை வேறு வார்த்தைகள் உள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக இரத்தம் படிந்த ஆடைகள், இரு சக்கர வாகனம் மற்றும் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆயுதங்கள் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சம்பவ தினத்தன்று மாலை 4.30 மணியளவில் அ.சா-1 கலியமூர்த்தி, அ.சா-2 ராசு, அ.சா-3 சுசிலா, அ.சா-4 சுபிராஜ் ஆகியோர்கள் இந்த எதிரிகளில் 1ம் எதிரி சூரியாராஜ், 3ம் எதிரி அபினாஷ் ஆகியோர்களை தாக்கினார்கள் என்றும், அது சம்மந்தமாக 1ம் எதிரி சூரியராஜ் 02.05.2022 ஆம் தேதி மருத்துவமனையில் இருந்து புகார் கொடுத்து அதன் அடிப்படையில் மேற்படி காவல் நிலையத்தில் குற்ற எண்.292/2022 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு அந்த வழக்கு ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். நான் இந்த வழக்கு சம்மந்தமாக முறையாக விசாரணை செய்திருந்தாலே அந்த வழக்கு விபரம் தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு விபரம் எனக்கு தெரியவில்லை. இந்த எதிரிகள் உண்மையில் தாக்கப்பட்டார்கள் என்றும், அந்த வழக்கில் இருந்து தப்பவேண்டும் என்பதற்காக சம்பவம் நடந்த அதே நேரத்தை குறிப்பிட்டு அதாவது 4.30 என குறிப்பிட்டு இந்த அ.சா-1 கலியமூர்த்தி ஒரு பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும், காவல் நிலை ஆணையின் படி ஒரே நேரத்தில் இரண்டு சம்பவங்கள் நடந்ததாக எதிர் எதிர் தரப்பினர் புகார் அளித்திருக்கும் பட்சத்தில் ஒரே அதிகாரிதான் விசாரணை

செய்யவேண்டும் என்றும், வேண்டும் என்றே மேற்படி நடைமுறைகளை எல்லாம் கடைபிடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் ஒரே நேரத்தில் நடந்த சம்பவமாக இருந்திருந்தால் இந்த வழக்கு கோப்பிலும் குறிப்பிடபட்டிருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு கோப்புகளில் அந்த காவல் நிலைய குற்ற எண். 292/2022 பற்றி நான் இதில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் ஆமாம். நான் குறிப்பிடவில்லை. நான் இந்த வழக்கு சரி வர புலன் விசாரணை செய்யவில்லை என்றும், வேண்டும் என்றே 1ம் எதிரி கொடுத்த புகாரினை மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லிய நேரத்தில் சொல்லிய இடத்தில் 6ம் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.05 17:51:28 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.